செ.வெ.எண்:-27/2020 நாள்:20.05.2020

திண்டுக்கல் மாவட்டம்

# திண்டுக்கல்லில் இருந்து பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 1600 தொழிலாளர்கள் சொந்த மாநிலத்திற்கு சிறப்பு ரயிலில் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

திண்டுக்கல்லில் இருந்து பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 1600 தொழிலாளர்கள் சொந்த மாநிலத்திற்கு திண்டுக்கல் ரயில்வே சந்திப்பில் இருந்து இன்று(20.05.2020) சிறப்பு ரயிலில் பாதுகாப்பாக அனுப்பி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

மத்திய, மாநில அரசுகள் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்க போர்க்கால அடிப்படையில் தீவிர தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. பொதுமக்களின் நன்மை கருதி, நோய் தொற்றை தடுக்கும் பொருட்டும், சமூக விலகலை உறுதி செய்யவும் குற்றவியல் நடைமுறை சட்டம் 144-ன் கீழ் திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு 31.05.2020-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான தொழிலாளர்கள் தொழில் நிமித்தமாக தமிழகத்திற்கு வந்து பல்வேறு மாவட்டங்களில் தங்கி பல்வேறு தொழிற்சாலைகளிலும், சாலையோர வியாபாரிகளாகும், கட்டடத் தொழிலாளர்களாகவும் தங்கி பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மாணவர்களாகவும் பலர் தங்கியுள்ளனர்.

ஊரடங்கு உத்தரவினால் வெளிமாநில தொழிலாளர்கள், மாணவர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்கு செல்ல முடியாத நிலையில் அவர்கள் விரும்பினால் அவர்களுடைய சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் தங்கியிருந்த 1339 தொழிலாளர்கள், தேனி மாவட்டத்தில் தங்கியிருந்த 261 தொழிலாளர்கள் என மொத்தம் 1600 பீகார் மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இன்று(20.05.2020) பிற்பகல் 2.00 மணியளவில் திண்டுக்கல் ரயில்வே சந்திப்பில் இருந்து சிறப்பு ரயில் மூலமாக அவர்களுடைய சொந்த மாநிலமாக பீகார் மாநிலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பீகார் செல்லும் தொழிலாளர்களுக்கு பயணத்தின்போது இரண்டு வேளைக்குத் தேவையான உணவு, பிஸ்கெட், பிரெட், ஜாம் மற்றும் குடிநீர் ஆகியவைகளுடன் அவர்கள் சொந்த ஊர்களுக்கு சென்றவுடன், அவரவர் குடும்பங்களுக்குத் தேவையான கோதுமை, ரவா, மைதா என ரூ.500 மதிப்பிலான நிவாரணப் பொருட்களும், மாவட்ட நிர்வாகம் மூலம் வழங்கப்பட்டு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆர்.கோவிந்தராசு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஆர்.சக்திவேல், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.ஆர்.ராஜ்குமார், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் திருமதி உஷா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**